உ

சிவமயம்

# கனடா-காரை கலாச்சார மன்றம்

## தமிழ்மொழித் திறன், பண்ணிசைப் போட்டி - 2019

## எழுத்து

### அதிமேற் பிரிவு (தரம்7,8,9)

எழுதுவதற்கு பென்சில், தாள், அழிறப்பர் என்பன மண்டபத்தில் வழங்கப்படும்.

பங்குபற்றும் மாணவர்கள் தரப்பட்ட விடயங்களை முழுமையாக எழுத ஆயத்தமாக வரல் வேண்டும்.

நடுவர்கள் கூறும் வசனங்களை மட்டும் பந்தி பந்தியாக எழுதல் வேண்டும்.

பரீட்சார்த்திகளின் எழுத்துக்கள் தெளிவாகவும் உறுப்பாகவும் இருத்தல் அவசியமானது.

### ரைட் சகோதரர்கள்

வில்பர் ரைட், ஆர்வில் ரைட் என்ற சகோதரர்கள் வானத்தில் பறந்து சாதனை படைத்தவர்கள் ஆவர். இவர்கள் அமெரிக்காவின் கரோலினா பகுதியில் முதலில் விமானத்தை பறக்கச் செய்தார்கள். இவ் விமானத்தில் ஆர்வில் ரைட் என்பவரே பறந்தார். இவரது பயணம் சில நிமிடங்களே நீடித்தது.

ரைட் சகோதரர்கள் தமது விமானத்திற்கு ‘‘கிட்டிகொக்’’ என்றே பெயரிட்டனர். ஆர்வில் ரைட் பயணம் செய்த விமானம் எண்ணூற்றைம்பது அடி தூரம் வரை பறந்தது. ஆயிரத்து தொளாயிரத்து ஐந்தாம் ஆண்டு ரைட் சகோதரர்கள் தங்கள் சாதனையை மீண்டும் நிகழ்த்திக் காட்டினர். இம்முறை விமானம் முப்பது நிமிடங்கள் வரை பறந்தது. அத்தோடு விமானம் கடந்து சென்ற தூரம் நாற்பது கிலோ

மீற்றர்களாக அதிகரித்தது. அதன்பிறகு தான் இவர்களின் சாதனையை உலகமே ஏற்றுக்கொண்டது.

விமானத்தைக் கண்டுபிடித்த ரைட் சகோதரர்கள் தம்முடைய இறுதிக்காலம் வரை விமானத் தொழிலில் புதுப் புது யுக்திகளைக் கையாண்டு வந்தனர். இவர்கள் கண்டுபிடித்த விமானம் அமெரிக்காவில் வாசிங்டன் நகர அருங்காட்சியகத்தில் வைக்கப்பட்டுள்ளது. ரைட் சகோதரர்களை நாம் இலகுவில் மறந்துவிட முடியாது.